தலைமைச் செயலகம்
சென்னை - 9

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை**

**அரசு கடித (நிலை) எண்.86/க்யூ.1/2010 நாள்.4.5.2010**

விடுநர்,
டாக்டர். த. பிரபாகர ராவ், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்,
முதன்மைச் செயலாளர்/செயலாளர்,
தலைமைச் செயலக அனைத்துத் துறைகள்,
அனைத்துத் துறைத் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
ஆணையர், நில நிர்வாகத்துறை, சென்னை-5.
ஆணையர், நிர்வாக வருவாய்த்துறை, சென்னை-5.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை-104/ மதுரை.
ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, சென்னை-32
அனைத்து மாவட்ட நீதிபதிகள்.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.
மாநிலக் கணக்காயர், சென்னை-18
மாநிலக் கணக்காயர் (தணிக்கை), சென்னை-35.
அனைத்து சம்பளக் கணக்கு அலுவலர்கள்/ அனைத்து கருவூல அலுவலர்கள்.
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-9
முதலமைச்சரின் செயலாளர், சென்னை-9
அமைச்சர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்கள், சென்னை-9

ஐயா/அம்மையீர்,

பொருள்: கருணை அடிப்படைப் பணிநியமனங்கள் – விண்ணப்பங்கள் பெறுவது மற்றும் குறமவயது நிர்ணயித்தல் – தெளிவுரைகள் – வழங்கப்படுகின்றன.

பார்வை:
1. அரசு கடித எண்.66813/க்யூ1/91–3, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 22.11.1991.
2. அரசாணை (நிலை) எண்.120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 26.06.1995.
3. அரசாணை (நிலை) எண்.112, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 23.08.2005.
4. அரசாணை (நிலை) எண்.42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 12.03.2007.

-----

கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் தொடர்பான இதர விதிமுறைகளுக்கிடையே, பார்வை ஒன்றில் காணும் அரசு கடிதத்தில் பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் 18 வயதிற்குட்பட்ட வாரிசுதாரருக்கும் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கலாம் என தெளிவுரை வழங்கப்பட்டது.

2. பார்வை இரண்டில் காணும் அரசாணையில், கருணை அடிப்படையில் பணிவேண்டி விண்ணப்பிக்க அரசு ஊழியர் இறந்த நாளிலிருந்து 3 ஆண்டுகள் என கால அளவு நிர்ணயித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.